2. தகவல் கோரல்

தவத்திரு குன்றக்குடி அடிகளார் மறைவுக்கு இரங்கல் தீர்மானம் கொண்டு வருதல் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சென்னை சிந்தாதிரிப்பேட்டை (குறுக்கீடு) —பேரவை விதி 56 இன் கீழ் (குறுக்கீடு) இல்லை, பேரவை விதி...

திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியன்: அதாவது அனுதாபத் தீர்மானம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது இங்கே அஜெண்டாவிலே இல்லாததினாலே எடுக்கவில்லை என்பதைச் சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடு) அது இப்பொழுது ஸீரோ அவரிலே வராது.

திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியன்: அவ்வளவு சாதாரணமானவரா அவர்? தமிழ்கூறும் நல்லுலகம்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைத் தனியாக எடுத்துக் கொள்ளலாம்.

திரு. எஸ்.ஆர்.பாலசுப்ரமணியன்: அவருக்கு அனுதாபம்கூட தெரிவிக்கவில்லை என்கிற பெயர் நமக்கு வேண்டாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. அஜெண்டாவிலே போட்டு எடுப்போம் என்று சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடு)

திரு. எஸ்.ஆர் பாலசுப்ரமணியன்: முதலிலே வரவில்லையே. (குறுக்கீடு) எப்பொழுதும் இரங்கல் தீர்மானம் முதலிலே வர வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரத்திற்கு முன்னதாக வர வேண்டும். (குறுக்கீடு) அஜெண்டாவிலே அது வராததினாலே அஜெண்டாவில் போட்டு, எடுப்போம் என்று சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடு) இந்த நேரத்தில் இல்லை.(குறுக்கீடு) இந்த நேரத்திலே எடுக்க வேண்டாம் என்று சொல்கிறேன். முறைப்படி எடுக்க வேண்டிய நேரத்திலே எடுக்கலாம்.

திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியன்: இரங்கல் தீர்மானத்தை, அவர் இறந்து இரண்டு நாட்கள் ஆனதற்குப் பின்னாலேயும் எடுக்கவில்லை என்றால்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை நாம் சில விதிமுறைகளின்படி எடுக்க வேண்டியிருக்கிறது. (குறுக்கீடு) இரங்கல் தீர்மானம் எடுப்பதற்கு சில விதிமுறைகளை வைத்திருக்கிறோம்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: இரங்கல் தீர்மானம் என்பது...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, உங்கள் கோரிக்கையை வைத்து விட்டீர்கள், உட்காருங்கள். மாண்புமிகு சட்ட அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு பொறுப்புள்ள எதிக்கட்சித் தலைவரவர்கள் உள்ளபடியே அதிலே அக்கறை இருக்குமேயானால் அவர் ஒன்பதரை மணிக்கே உங்களிடத்திலே வந்து தகவலைச் சொல்லி கேள்விக்கு மேலாகச் சொல்லியிருந்தால் அது முறை. இடையிலே, முடிந்தபிறகு அவர் சொல்வது ஏற்பு அல்ல என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(கூச்சல்-குழப்பம்)*

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: தவறாகச் சொல்லுகிறீர்கள். முன்னரே நாங்கள் அந்தக் கோரிக்கையை வைத்திருக்கிறோம். நாங்கள் ஒன்பதரை மணிக்கெல்லாம் வந்தோம். *(குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. *(குறுக்கீடு)* இங்கே வந்தபிறகுதான் கேட்டார்கள். அஜெண்டாவிலே இல்லை. ஆகவேதான் முறைப்படி எடுப்போம் என்றும் சொல்லியிருக்கிறேன். *(குறுக்கீடு)* முறைப்படி பரிசீலித்து எடுப்போம் என்று சொல்லியிருக்கிறேன். *(குறுக்கீடு)*

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: அடுத்த நாளே இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டுமென்பது எங்களுடைய கோரிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் கோரிக்கையை வைத்திருக்கிறீர்கள். அதை முறைப்படி எடுக்கலாம். *(குறுக்கீடு)* இல்லை, இப்பொழுது எடுப்பது இல்லை. அனுதாபத் தீர்மானம் கேள்வி நேரத்திற்கு முன்னர் எடுப்பதுதான். *(குறுக்கீடு)* இல்லை. இப்பொழுது உங்கள் கோரிக்கையை மட்டும்தான் வைக்கலாம்.

நான் அந்த நேரத்திலேயே சொல்லியிருக்கிறேன். *(குறுக்கீடு)* முறைப்படி அஜெண்டாவில் சேர்க்கப்பட வேண்டும். சில விதிமுறைகள் இருக்கின்றன. *(குறுக்கீடு)* சில விதிமுறைகளைப் பின்பற்றித்தான் இரங்கல் குறிப்புகளை இங்கே எடுக்கிறோம். *(குறுக்கீடு)* சிந்தாதிரிப்பேட்டையில் இந்து முன்னணி கட்டிட குண்டு வெடிப்பு சம்பவம் பற்றி *(குறுக்கீடு)*

முற்பகல் 11-05

திரு.எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: அவருக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் இன்றையதினம் நாங்கள் அவை நடவடிக்கைகளிலே கலந்துகொள்ளவில்லை.

1995 ஏப்ரல் 17]

(திருமதி ஜீனத் சர்புதீன், திரு. இரா. அப்பு நடேசன், திரு. ஆர். சிங்காரம், திரு. சஞ்சய் ராமசாமி, திரு. கே. செல்வராஜ், திரு. கே. கே. சின்னப்பன், திரு.வே. கண்ணன், ஆகியோரைத் தவிர காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் அனைவரும் அவையை விட்டு வெளியேறினர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சில விதிமுறைகள் இருக்கின்றன. அந்த விதிமுறைகளின்படிதான் எடுக்கிறோம். அதை எடுக்க வேண்டுமென்றால் என்னிடத்திலே வந்து தனியாகச் சொல்வதுதான் முறை. (குறுக்கீடு) அஜெண்டாவில் போட்டு, எடுக்கவேண்டும்.(குறுக்கீடு)

திரு. ஜி. பழனிசாமி: அரசுத் தரப்பிலே அதைக் கொண்டுவர வேண்டும். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர்.

* *மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதாரணமாக அவை தொடங்கிய உடனே இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றி அனுதாபம் தெரிவிப்பதுதான் முறையாக இருந்து கொண்டு வருகிறது. கடந்த 5 நாட்களாக தொடர்ந்து விடுமுறை இருந்ததன் காரணமாகவும், இன்றுதான் சட்டமன்றமே தொடங்கப்பட்டிருப்பதன் காரணமாகவும், அரசின் சார்பாக முன்கூட்டியே நிகழ்ச்சி நிரலில் சேர்த்து அந்தத் தீர்மானத்தைக் கொண்டு வருவதற்கு வாய்ப்பு இல்லாத காரணத்தினாலே கொண்டுவரப்படவில்லை. இரங்கல் தீர்மானத்தை பலபேருக்கு தள்ளிகூட எடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே, குன்றக்குடி அடிகளார் அவர்களுடைய மறைவு குறித்து இரங்கல் தெரிவிப்பதிலே இந்த ஆளும் கட்சியினருக்கும் சரி, அவைக்கும் சரி உள்ளபடி கடப்பாடு இருக்கிறது. பொறுப்புணர்ச்சி இருக்கிறது. தமிழுக்கும், தமிழ்நாட்டுக்கும், தமிழ் மக்களுக்கும் பாடுபட்டவர். ஆகவே, நாளை காலையிலே இந்தத் தீர்மானத்தை எடுத்துக் கொள்ளலாம். ஆகவே, அதற்கு ஒருமுறை இருக்கிறது என்றுதான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் சொல்கிறார்களே தவிர, எடுத்துக் கொள்ளக்கூடாது, எடுத்துக்கொள்ள முடியாது என்று கூறவில்லை. ஏதோ காரணம் வேண்டும் என்பதற்காக, அவர்கள் எண்ணிக்கொண்டிருப்பார்களேயானால், தவறு அங்கேதான் இருக்க முடியும். நாளை காலை எடுத்துக்கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏற்கெனவே சொன்னதுதான். திருமதி பொன்னம்மாள் அவர்கள் எழுந்து எழுப்பிய உடனே சில முறைகள் இருக்கின்றன, அஜெண்டாவில் போட வேண்டும் என்று

சொன்னேன். பேரவை முன்னவர் அவர்கள் சொன்னதுமாதிரி 4,5 நாட்கள் விடுமுறை. நானும் இல்லை. பேரவை முன்னவரும் இல்லை. பேரவை முன்னவர் அவர்கள் வந்த புகைவண்டியே தாமதமாக வந்து, அதனால் அஜெண்டாவை இறுதி செய்ய முடியவில்லை. அஜெண்டாவில் சேர்க்காமல் ஒன்றும் கொண்டுவர வேண்டாம் என்பதற்காகத்தான் காலையிலேயே சொன்னேன். எதிர்க்கட்சித் தலைவருக்கும் சொன்னேன். சில விதிமுறைகள் இருக்கின்றன. அதன்படிதான் செய்ய முடியும் என்று சொல்லிக்கொண்டிருக்கும்போதே, சீரோ ஹவரில் இரங்கல் தீர்மானம் போடுங்கள் என்று கேட்பது முறையல்ல. அவை கூடுகிற அந்த முதல் நேரத்திலே போடுவதுதான் முறை. பேரவை முன்னவர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க நாளைக்கு அஜெண்டாவில் போட்டு எடுக்கலாம்.

3. ஒத்திவைப்புத் தீர்மானம்

சிந்தாதிரிப்பேட்டை இந்து முன்னணிக் கட்டட குண்டு வெடிப்புச் சம்பவம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சிந்தாதிரிப்பேட்டை இந்து முன்னணி கட்டிட குண்டு வெடிப்பு சம்பவம் குறித்து, பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று கோரி, திருமதி ஜீனத் சர்புதீன், திரு. கே. செல்வராஜ், திரு. ஆர். சிங்காரம், திரு. இரா. தாமரைக்கனி, திரு. வே. தம்புசாமி, திரு. சி. ஞானசேகரன், திரு. ப. ரங்கநாதன், திரு. ஜி. பழனிசாமி ஆகியோரிடமிருந்து எனக்கு அறிவிப்புகள் வந்துள்ளன. இது எவ்வாறு பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்கும் அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைச் சுருக்கமாக விளக்கக் கேட்டுக்கொள்கிறேன். திருமதி ஜீனத் சர்புதீன்.

திருமதி ஜீனத் சர்புதீன்: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, 14-4-1995 அன்று என்னுடைய தொகுதியிலுள்ள சிந்தாதிரிப்பேட்டையில் அய்யா முதலி தெருவிலுள்ள இந்து முன்னணி அலுவலகத்தில் சுமாராக மாலை 3.45 மணியளவில் குண்டு வெடித்தது. அதில், அந்த குண்டு கொண்டுவந்தவனும் இறந்துவிட்டான். இந்து முன்னணியைச் சார்ந்த பைபிள் சண்முகம் என்பவரும் இறந்துவிட்டார். ஆனால், அது நடந்த உடனே மின்னல் வேகத்தில் மிகத் துரிதமாக, காவலர்கள் வந்தார்கள். அதே நேரத்தி ஃபயர் இன்ஜின் தண்ணீருடன் வந்து அங்கே என்னென்ன மக்களுக்கு செய்ய முடியுமோ அத்தனை ஒத்தாசைகளையும் செய்தார்கள். அந்தச் சம்பவம் நடந்த 8 நிமிடத்திலே